14.06.2024 அ.வ. எண். 182/2019 வா.சா. 1 செல்வராஜ்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

அக்கப்ப நாயுடு மகள்களான சகுந்தலா அம்மாள், என்னுடைய தாயார் சரோஜினி அம்மாள் ஆகியோர்களுக்கு எந்த கெட்ட பழக்கமும் இல்லை. மேற்சொன்ன இருவரும் ஊதாரித்தனமாக செலவும் செய்யவில்லை. இருவரும் அவரவர்கள் குடும்பத்தை நல்லமுறையில் தான் பார்த்து வந்தார்கள். அக்கப்ப நாயுடுவின் நேரடியாக வாரிசுகள் சகுந்தலா அம்மாள், சரோஜினி அம்மாள். அக்கப்ப நாயுடு இறந்தபிறகு அவருடைய வாரிசுகள் அக்கப்ப நாயுடு சொத்துக்களை அடைவதில் ஆட்சேபனை இல்லை. அக்கப்ப நாயுடு எந்த ஆவணமும் ஏற்படுத்தவேண்டிய அவசியமும், நிர்பந்தமும் இல்லை என்றால் அப்படி எல்லாம் இல்லை. அக்கப்ப நாயுடுவை தினந்தோறும் செய்த தொந்தரவு காரணமாக தான் அவருக்கு பாத்தியப்படாத சொத்துக்களை எழுதியுள்ளார் என்று சொன்னால் தவறு. சரோஜினி அம்மாளும் அவருடைய வாரிசுகளும் விற்பனை செய்த சொத்துக்களை மட்டும் வழக்கில் சம்மந்தமில்லாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் விற்பனை செய்த சொத்துக்கள் குறித்த விவரங்களை தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளேன் என்றால் தவறு. நான் ஏக்கர் 7.47 செண்ட் நிலத்தை சரோஜினியம்மாள் வாரிசுகள் விற்பனை செய்த நபருக்கு தான் நானும் விற்பனை செய்துள்ளேன் என்றால் தவறு, வேறு நபர்களுக்கு தான் விற்பனை செய்துள்ளேன். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அக்கப்ப நாயுடு எனக்கு எந்த உயிலும் எழுதிவைக்கவில்லை என்றும், நான் உயில் எழுதிவைத்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அக்கப்ப நாயுடு எனக்கு 3 செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதிவைத்துள்ளார். செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய பிறகு அக்கப்ப நாயுடு உயில் எழுதவேண்டிய அவசியம் இல்லை என்றும், உயில் எழுதியதாக மோசடியாக நான் ஆவணம் உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. உயில் பிரதிவாதியை சட்டப்படி கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து அக்கப்ப நாயுடு கையெழுத்தே அல்ல என்றும், அவர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கே வரவில்லை என்றும், படுத்தபடுக்கையாக

இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் ஊரில் இருந்து பெரணமல்லூர் சார்பதிவாளர் அலுவலகம் 3 கி.மீ தூரத்தில் உள்ளது என்றும், அங்கு பதிவு செய்யாமல் செய்யாரில் பதிவு செய்துள்ளதில் இருந்தே உயில் ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் தவறு. உயில் ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவர் என கையெழுத்து போட்டுள்ளது என்னுடைய தகப்பனார் தான் என்றால் சரியல்ல. சரோஜினி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை உயில் மூலமாகவும், கிரய ஆவணம் மூலமாகவும் பிரதிவாதிக்கு எழுதிவைத்துள்ளார் என்றும், அதை நான் கேள்விகேட்க முடியாது என்றால் தவறு. பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தில் பண்ணை சார்ந்த மரங்கள் நட்டு பிரதிவாதியின் அனுபவத்தில் தான் சொத்து இருந்துவருகிறது என்றால் தவறு, அவர் நட்டுள்ளாரா என்று எனக்கு தெரியாது. நான் ஊரில் சென்று பார்த்துள்ளேன் என்றும், தெரிந்தே தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் குறித்து பட்டா மாறுதல் செய்ய மனு கொடுத்து விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் தவறு. தாவா சொத்து குறித்து உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யதாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.